கிருஷ்ணகிரி மாவட்டத்திலிருந்து நான்கு பேர் புனித யாத்திரைக்குச் சென்றுள்ளனர். அவர்கள் நேற்று சிமிகோட் பகுதிக்குத் திரும்பியுள்ளனர். அவர்களை நேபால்கன்ச் வழியாக இந்தியாவிற்கு அழைத்துவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முற்பகல் 11–20

இது தவிர, தேனி மாவட்டத்திலிருந்து தனியே புனித யாத்திரைக்குச் சென்ற 6 பேர் கொண்ட குழுவில், ஆண்டிப்பட்டியைச் சேர்ந்த 69 வயதான ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் திரு. ராமச்சந்திரன் என்பவர் புனித யாத்திரை செல்லும் வழியில் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் யாத்திரையை முடிக்க முடியாமல் திரும்பி வரும்போது மூச்சுத் திணறி இறந்ததாகத் தகவல் பெறப்பட்டது. தற்போது அவரது உடல் நேபாள தலைநகர் காட்மண்டுவில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. தகவல் தெரிந்த அவரது மகனும், மகளும் அங்கே சென்றுள்ளனர். அன்னாரது உடலை இன்று அல்லது நாளைக்குள் அவரது சொந்த ஊருக்கு எடுத்துவர நேபாள நாட்டின் காட்மண்டுவில் உள்ள இந்திய தூதரகம் மூலமாக புதுடெல்லியிலுள்ள தமிழ்நாடு இல்ல அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுத்து வருகின்றனர். நேபாள நாட்டிற்கு தமிழ்நாட்டிலிருந்து சென்றுள்ள அனைத்து யாத்ரீகர்களும் பாதுகாப்பாக அவர்களது சொந்த ஊர் திரும்புவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அம்மா அவர்களுடைய அரசு எடுத்து வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) பல்கலைக்கழக மானியக் குழுவைக் கலைத்து மத்திய அரசு, தேசிய உயர் கல்விக் குழுவை அமைக்கத் திட்டமிட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக்கழக மானியக் குழுவை (U.G.C.) ஒழித்துவிட்டு உயர் கல்வி ஆணையத்தினை உருவாக்க மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது. இந்த ஆணையம் என்பது மாநில உரிமைகளுக்கும், மாநிலத்தில் இருக்கக்கூடிய பல்கலைக்கழகத்திற்கும், எந்த*

அளவிற்கு உதவிகரமாக இருக்கப்போகிறது என்பது பற்றி ஒரு கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. புதிய உயர் கல்வி ஆணையத்திற்கு ஆலோசனை வழங்கும் Advisory Council–ல் மாநிலத்தினுடைய பிரதிநிதியும் இருப்பார் என்று உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த உத்தரவாதம் அளிக்கப்பட்டிருந்தாலும், உயர் கல்வி தொடர்பாக மாநிலங்களுக்கு பல்கலைக்கழக மானியமாக நிதியொதுக்கக்கூடிய அதிகாரம் உயர் கல்வி ஆணையத்திடம் இல்லை. மாநிலத்திலுள்ள உயர் கல்வி திட்டங்களுக்கு நிதியொதுக்கும் சட்டபூர்வமான அதிகாரம், முழுக்க முழுக்க பல்கலைக்கழக மானியக் குழுவிடம்தான் இருந்தது. இந்த அதிகாரத்தை இப்போது மத்திய அரசு எடுத்துக்கொண்டு, தனது அரசியல் ரீதியான விருப்புரிமைகளுக்கேற்ப நிதியொதுக்கீடு செய்யப்போகிறது.

ஏற்கெனவே பா.ஜ.க. அல்லாத கட்சிகள் ஆளக்கூடிய மாநிலங்களை இரண்டாம் தரத்திலே வைத்துப் பார்க்கக்கூடிய அளவில், விநோதமான அணுகுமுறையை மத்திய அரசு தொடர்ந்து பின்பற்றி வருகிறது. நான்கு முறை முயற்சி செய்தும் கேரள மாநிலத்தினுடைய முதலமைச்சர் அவர்களைச் சந்திக்க மாண்புமிகு பிரதமர் அவர்களே தவிர்த்திருக்கிறார்கள். எனவே, உயர் கல்விக்கான நிதி ஒதுக்கீட்டிலும் பா.ஜ.க.-வினுடைய அரசியல் புகுந்து விளையாடுவதற்கான கதவுகள் திறக்கப்படுகின்றனவோ என்ற ஐயப்பாடு உயர் கல்வி தொடர்பான அனைத்து முனைகளிலும் இப்போது முளைத்திருக்கிறது.

தமிழ்நாட்டிலே 13 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. பல்கலைக்கழக மானியக் குழு நிதியுதவியிலிருந்து பல்வேறு சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இனி, அவற்றுக்கெல்லாம் நிதி எப்படி கிடைக்கப்போகிறது? உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அண்ணா பல்கலைக்கழகத்திலே மட்டும் 12,000–க்கும் மேற்பட்ட Ph.D., ஆராய்ச்சியாளர்களும், 200–க்கும் மேற்பட்ட M.S. ஆராய்ச்சி படிப்பு மேற்கொள்பவர்களும் இருக்கிறார்கள். இந்த நிலையிலே பல்கலைக்கழக மானியக் குழுவிற்குப் பதிலாக அமையக்கூடிய உயர் கல்வி ஆணையத்திடம் மாநிலங்களுக்கு நிதியொதுக்கீடு செய்யும் அதிகாரம் இல்லை என்ற நிலை ஏற்பட்டுவிட்டால், பல்கலைக்கழக மானியக் குழு உதவியோடு நடைபெறக்கூடிய கல்வித் திட்டங்கள், கிடைக்கப்பெறும் மானியங்கள், ஆராய்ச்சி மாணவர்களுடைய நிலை போன்றவை கேள்விக்குறியாகிவிடும்.

2018 ஜூலை 4] [திரு. மு.க. ஸ்டாலின்]

உயர் கல்வி பயிலக்கூடிய மாணவர்களில் 50 சதவீதத்திற்கு மேற்பட்டோர் மாநில பல்கலைக்கழகங்களில் படிப்பதால், அவர்களுடைய கல்வித் தரத்தை உயர்த்த இதுவரை பல்கலைக்கழக மானியக் குழு அளித்துவந்த நிதியொதுக்கீடு இனி எப்படி செய்யப்படும்? ஆகவே, உயர் கல்வி ஆணையம் அமைப்பது குறித்து, உயர் கல்வியில் 50 சதவீதத்திற்கு மேல் பங்களிப்பை செலுத்தி வரக்கூடிய மாநில அரசுகளின் கருத்துகளை மத்திய அரசு கேட்டதா? அப்படி இதுவரை கேட்கவில்லை என்று சொன்னால், மாநில அரசுகளின் கருத்தைக் கேட்ட பிறகுதான் உயர் கல்வி ஆணையத்தை அமைத்திருக்க வேண்டும். அப்படி அமைக்கப்படக்கூடிய ஆணையம், மாநிலங்களில் இருக்கக்கூடிய பல்கலைக்கழகங்களுக்கு மத்திய அரசினுடைய அரசியல் தலையீடு இல்லாமல், சுதந்திரமாக நிதியொதுக்கீடு செய்யும் அதிகாரமும் பெற்றிருக்க வேண்டுமென்று மத்திய மனித வள மேம்பாட்டுத் துறையினுடைய அமைச்சர் அவர்களை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விடுதலை பெற்ற இந்தியாவில் ஆழ்ந்த சிந்தனைக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட அமைப்புகள் ஒவ்வொன்றாக இப்போது கலைக்கப்படக்கூடிய சூழ்நிலையில் போய்க் கொண்டிருக்கின்றன. முன்னர் திட்டக் குழு, இப்போது U.G.C. *எனப் பட்டியல் நீண்டுகொண்டே போய்க் கொண்டிருக்கிறது. எனவே, இந்தக் கருத்தை நான் இங்கே பதிவு செய்து, இதற்கு அரசு என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறது, என்ன நடவடிக்கையை எடுக்கப் போகிறது என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

முற்பகல் 11–25

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மத்திய அரசு,* new Higher Education Commission of India – HECI *என்ற ஓர் அமைப்பை* University Grants Commission*–க்குப் பதிலாக திணிக்கப் பார்க்கிறது. அதனால்–* discrimination will be increased, social justice will be denied, development of education in Tamil Nadu will be curbed. Central Government has adopted a new 'One Culture'. *அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை*

ஏற்படுமேயானால், நம் எதிர்கால தமிழகத்தினுடைய கல்வி பாதிக்கப்படும். U.G.C. மூலமாகவே நாம் பல்வேறு நன்மைகளைப் பெற்றிருக்கிறோம். இப்போது பல்வேறு பல்கலைக்கழகங்கள் இயங்கி வருகின்றன. பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களை நாம் பெற்றிருக்கிறோம். தமிழகத்தில் கல்வி மிகச் செருக்காக வளர்ந்து கொண்டிருக்கிறது. அந்த வளர்ச்சிக்கு U.G.C. நிதியுதவி செய்து தந்திருக்கிறது. இப்போது ஆளுகின்ற மத்திய அரசு, இந்துத்துவா, ஆர்.எஸ்.எஸ். முறையை உட்புகுத்துவதற்காக தனி ஆணையத்தை அமைக்கும்பட்சத்திலே, நாம் நம்முடைய natural justice–ஐ, நமக்குக் கிடைக்க வேண்டிய நன்மைகளை இழக்க நேரிடும். இதனால், கல்வியில் நாம் பின்தங்கிப் போகக்கூடிய நிலை ஏற்படும். மத்திய அரசு, அனைத்தையும் தனது கட்டுப்பாட்டிலே கொண்டு வர முயற்சிக்கிறது. பல்வேறு வளர்ந்த கலாச்சாரங்களுடன் பன்மைத் தன்மை கொண்டிருக்கக்கூடிய இந்த நாட்டிலே, தமக்கென்றே தாம் என அமைத்துக்கொண்டு கல்வியைச் சிதைப்பதற்காக, கல்வியை தம் கட்டுப்பாட்டில் வைப்பதற்காக இப்படிப்பட்ட முறைகளைக் கொண்டு வந்தால், அதை ஏற்கக் கூடாது என்பதை நான் உங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எதிர்காலத்தின் நன்மையைக் கருதி, நம்முடைய மக்கள் தொடர்ந்து கல்வியிலே இன்னும் வளர வேண்டும், இன்னும் பெருக வேண்டும் என்பதற்காக இப்படிப்பட்ட முயற்சிகளை நாம் தவிர்க்க வேண்டும். நமது மாநில அரசு, மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து, இதிலிருந்து நம்மை விடுவித்துக்கொள்வதற்கு தயவுசெய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறையானது பல்கலைக்கழக மானியக் குழுச் சட்டத்தை நீக்கி, அதற்குப் பதிலாக தேசிய உயர் கல்விக் குழுவை அமைக்க திட்டமிட்டுள்ளது. மாண்புமிகு மத்திய மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. பிரகாஷ் ஜவடேகர் அவர்கள், தேசிய உயர் கல்விக் குழுவினை அமைப்பதற்கான வரைவு சட்டமுன்வடிவு, 2018–ஐத் தயாரித்துள்ளதாக, 27-6-2018 அன்று அறிவித்துள்ளதுடன், அச்சட்டமுன்வடிவின் மீதான குறிப்புகள் மற்றும் பரிந்துரைகளை ஜூலை 7, 2018–க்குள் தெரிவிக்குமாறு அனைத்து மாநிலங்களையும்

கேட்டுக்கொண்டுள்ளார். இச்சட்டமுன்வடிவை தமிழக அரசின் உயர் கல்வித் துறை ஆராய்ந்து வருகிறது. மேலும், உயர் கல்வித் துறையின்கீழ் இயங்கும் அனைத்து 13 பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களிடமும் இதுகுறித்து விரிவான குறிப்புரைகள் கோரப்பட்டுள்ளன. மேற்கண்ட விவரங்கள் பெறப்பட்டு, இப்பொருள் குறித்து ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களிடமும், மாண்புமிகு துணை முதலமைச்சர் ஓ.பி.எஸ். அவர்களிடமும் அறிவுரைகளைப் பெற்று, அவற்றின் அடிப்படையிலே தமிழக அரசினுடைய விரிவான அறிக்கை 7-7-2018-க்குள் மத்திய அரசுக்கு அளிக்கப்படும். ஏற்கெனவே U.G.C. *வாயிலாகப் பெற்று வந்த உரிமைகளை விட்டுக்கொடுக்காத வகையில், புதிய அமைப்பானது கல்வியில் மட்டுமே கவனம் செலுத்துவதாகவும், மனித வள மேம்பாட்டு அமைச்சகம் மானிய விவரங்களைக் கவனித்து வருவதாகவும் கூறப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, இச்சட்டத்தின் மூலமாக நம்முடைய உரிமைகளைப் போராடி பெறக்கூடிய சூழ்நிலையை வலியுறுத்தி ஜூலை 7 ஆம் தேதிக்கு முன்பாக உயர் கல்வித் துறை மூலமாக மத்திய அமைச்சகத்திற்கு அறிக்கை அனுப்பப்படும் என்பதையும் சுட்டிக்காட்டுகிறேன்.*

அதேவேளையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகம் எந்தவிதத்திலும் பாதிக்காதவண்ணம் உயர் கல்வி பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அதனடிப்படையிலேதான், இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழகமானது உயர் கல்வியிலே முதலிடத்தில் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்திய அளவிலே மாணவர்களின் சேர்க்கை விகிதம் gross enrolment ratio *25.2% ஆக இருந்தது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலால், அந்த விகிதம் 46.9% பெற்று தமிழகம் உயர்ந்த இடத்தில் இருக்கிறது.* (மேசையைத் தட்டும் ஒலி) *அதோடுமட்டுமல்லாமல், மத்திய அரசு தற்போதுள்ள 25.2 சதவிகிதம் என்பதை 2020–ல் 30 சதவிகிதமாக உயர்த்த வேண்டுமென இலக்கு நிர்ணயித்து, அதன் அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. 2020–ல் 30 சதவிகிதத்தை அடைய வேண்டுமென்ற எண்ணத்தோடு மத்திய அரசு இருக்கின்ற*

நிலையிலும், உலகளவிலே உயர் கல்வியில் மாணவர்களின் சேர்க்கை விகிதம் 36% ஆக இருக்கின்ற நிலையிலும், இந்தியாவே திரும்பிப் பார்க்கின்றவகையில் தமிழகமானது உயர்ந்த இடத்தில் இருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாணவர்கள் ஆராய்ச்சிப் படிப்பை எப்படித் தொடருவார்கள் என்று கேள்வி எழுப்பினார்கள்.

முற்பகல் 11–30

ஆராய்ச்சிப் படிப்பைப் பொறுத்தவரை, இன்றைக்கு இந்திய அளவிலே தமிழகம்தான் ஆராய்ச்சிப் படிப்பை முடித்து வருகின்றவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் முதலிடத்தில் இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், உயர் கல்வித் துறையின் மூலமாக மத்திய அரசிடம், பல்கலைக்கழகங்களினுடைய மானியக் குழுமூலம் பெற்று வந்த உரிமைகளை தொடர்ந்து பெறுவதற்குண்டான வழிவகைகளைச் செய்வோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வாய்ப்பு கேட்டார்கள். அதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) இல்லை, இதற்கு மேலே விவாதம் வைத்துக்கொண்டால் நீண்டுகொண்டே போகும். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் கேட்கலாம், நான் அனுமதி தருகிறேன். ஆனால், இது ஒரு முன்மாதிரியாகிவிடும். சரி, கேளுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, academic Interestதான். U.G.C. என்பது well established institution. இதுவரையிலும் பல்கலைக்கழகங்களுக்கு அவர்கள்தான் ஷரத்துக்கு ஏற்றவாறு நிதியினை வழங்குவார்கள். அதை எடுத்துவிட்டு, உயர் கல்வி ஆணையத்தை உருவாக்குவதற்கு என்ன காரணம்? பல்கலைக்கழக மானியக் குழுவை உயர் கல்வி ஆணையம்மூலம் பெரியதாகச் செய்திருப்பதாகச் சொல்லியிருக்க வேண்டும். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் செய்த சாதனைகளையெல்லாம் சொல்கிறார். அதை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். எனக்கு தெளிவுபடுத்த வேண்டியது என்னவென்று கேட்டால், U.G.C. என்பது நீண்ட நெடுங்காலமாக

2018 ஜூலை 4] [திரு. துரைமுருகன்]

கல்வித் துறையிலே, பல பல்கலைக்கழகங்களில் established *ஆக இருக்கக்கூடிய ஒன்று, அதை எடுத்துவிட்டு இதை மாற்றுகிறார்களே, அதற்கு என்ன காரணம்? அதைத்தான் நான் தெரிந்துகொள்ள வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர், நீங்கள் பதில் சொல்கிறீர்களா? சரி, சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசானது ஒரு முடிவெடுத்து, இன்றைக்கு கல்வியில் மட்டும் கவனம் செலுத்துகின்ற வகையில், இந்திய உயர் கல்வி ஆணையம் என்பதைத் தோற்றுவிப்பதற்காகவும், அதேநேரத்தில் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் மூலமாக மானியத்தை விடுவிப்பதற்காகவும் அவர்கள் இந்தச் சட்டத்தை இயற்றியிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, கல்வி சார்ந்த வகையிலே,* U.G.C.*–யோடு ஒருங்கிணைந்து அவர்கள் செயல்பட்டதை மாற்றியமைக்கின்ற வகையிலேதான் இந்தச் சட்டத்தை இயற்றியிருக்கிறார்கள். அதற்கு அழுத்தம் கொடுக்கின்ற வகையிலேதான் 7 ஆம் தேதி வரை அனுமதி தந்திருக்கிறார்கள். 7 ஆம் தேதிக்குள்ளாக 13 பல்கலைக்கழகங்களினுடைய துணைவேந்தர்களுடனும், கல்வியாளர்களுடனும் ஆய்வுகளை மேற்கொண்டு, அதன் மூலமாக உரிமைகள் எந்தவிதத்திலும் பறிக்கப்படாதவண்ணம் தொடர்ந்து உயர் கல்விக்கு அவர்கள் வழங்கிய மானியத்தைப் பெறுகின்ற வகையிலேதான் அரசானது முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைச் சுட்டிக்காட்டி, அதேவேளையில் எந்தவிதத்திலும் பாதிப்புகள் இல்லாமல் பாதுகாக்கின்ற அரசாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியிலே வந்த அரசு இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதையும் கோடிட்டுக் காட்டியிருக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(இ) பறக்கும் இரயில் திட்டத்தை பரங்கிமலை வரை நீட்டிக்கும் பணியை விரைவாக முடிக்கக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன், என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை கடற்கரை முதல் மயிலாப்பூர் வரை 260 கோடி ரூபாய் மதிப்பில் 9 கிலோ மீட்டர் நீளத்திற்கு*